**நிர்மாண உத்தரவாத நிதியம் - 2016**

நிர்மாண உத்தரவாத நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2010 பெப்ரவரி 08 ஆம் திகதிய 3/136 ஆம் இலக்க நம்பிக்கை பொறுப்பு உறுதியின் 23 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிர்மாண உத்தரவாத நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய வட்டி வருமானம் மற்றும் வட்டி ஆண்டிற்கான வருமானம் ரூபா 3,182,842 தொகையால் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது.

(ஆ) கணக்கீட்டு மென்பொருளொன்றினை கொள்வனவு செய்வதற்காக தனியார் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 375,000 தொகையான முற்பணம் ஆண்டிற்கான செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் மிகை மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 375,000 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களின் பிரகாரம், ஒப்பந்த காரர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 79,711,702 தொகையாகவிருந்ததுடன் அது இறுதி கணக்குகளில் ரூபா 71,083,791 ஆக காட்டப்பட்டிருந்தது. அதனால், கணக்குகள் மற்றும் பட்டியல்களுக்கிடையிலான வித்தியாசம் ரூபா 8,627,911 தொகையாகவிருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2010 பெப்ரவரி 08 ஆந் திகதிய 3/136 ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 7 ஆம் பிரிவு | நிதியத்தின் நம்பிக்கை பொறுப்பு சபையின் தலைவர் அல்லது பொறுப்பாளராக செயற்படு வதற்காக செலவிடப்பட்ட செலவினத்தை மீள் நிரப்புவதல்லாமல் தம்மால் வழங்கப்படும் சேவைக்காக எதுவித படியொன்றை நிதியத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்கு உரித்தொன்று இல்லாத போதிலும், அதற்கு முரணாக மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்காக தலைவர் படிகள் மற்றும் நம்பிக்கைப் பொறுப்புச் சபை படிகள் என ரூபா 8,727,100 கூட்டுத்தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று முறையாகப் பேணப்பட்டி ருக்கவில்லை. |
| (இ) பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 2006 யூலை 14 இன் பீஈடி 38 ஆம் இலக்க சுற்றறிக்கை | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலுள்ள பெறுமதி சேர் வரிக்காக நிதியம் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2016 ஏப்ரல் 29 இன் 03 ஆம் இலக்க சுற்றறிக்கை | உழைக்கும் போதே செலுத்தும் வரியை செலுத்துவதற்கு பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து வரியை அறவிடுவதற்கும் அதனை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் மிகை ரூபா 82,968,314 ஆக இருந்ததுடன், அதனோடெத்த முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 36,930,287 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 46,038,027 முன்னேற்றமொன்று காணப்பட்டது. உத்தரவாத முறி வருமானம் ரூபா 27,082,991 இனாலும், நிலையான வைப்புகள் ரூபா 23,410,137 ஆல் அதிகரித்தமை என்பன மேற்குறித்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாகவிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிற்கு முறிகளை வழங்கல் நிதியத்தின் பிரதான நோக்கமாகவுள்ளது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் வழங்கப்பட்ட முறிகளின் எண்ணிக்கை முறையே 2,911 மற்றும் 1,559 ஆக இருந்தது. அதனால், 1,352 முறிகளின் நன்மைரீதியான முரண்கள் கீழே குறிப்பிட்டவாறு அவதானிக்கப்பட்டன.

| **முறி** | **ஆண்டு** | | **முரண்** |
|---|---|---|---|
| | **2016** | **2015** | **சாதகம் / (பாதகம்)** |
| ஏல முறிகள் | 2,208 | 1,302 | 906 |
| முற்பண முறிகள் | 290 | 102 | 88 |
| செயலாற்றல் முறிகள் | 402 | 143 | 259 |
| பராமரிப்பு முறிகள் | - | 3 | (3) |
| பிடித்து வைத்தல் காசு முறிகள் | 11 | 9 | 2 |
| **மொத்தம்** | **2,911** | **1,559** | **1,352** |

(ஆ) நிதியத்தினால் விநியோகிக்கப்பட்ட முறிகள் அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறிகளாக,இனங்காணப்பட்டமையின் காரணமாக, இந்த முறிகளை பல்வேறு அரச நிறுவனங்கள் நிராகரிக்கும் நிலமையொன்று அவதானிக்கப்பட்டது. ஆகையினால், இந்த நிதியத்தை தாபிப்பதன் நோக்கங்கள் போதியளவில் அடையப்பெற்றிருக்கவில்லை.

### 4.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

நிதியத்தின் கணக்குகளை தயாரித்தலானது நிர்மாணம், பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் 17 உத்தியோகத்தரால் வெளிவாரி சேவை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் இதற்காக ரூபா 1,127,300 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 1999 மே இல் இது தொடர்பில் நடைபெற்ற நம்பிக்கை பொறுப்பு சபையின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட 90-05-31 ஆம் இலக்க முகாமைத்துவ தீர்மானத்தின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்களின் சேவைகளை பெறுவதற்கு தீர்மானித்திருந்த போதிலும், இது தொடர்பில் நியமனங்களை வழங்குதல் அல்லது சேவை உடன்படிக்கையில் ஈடுபடுதல் ஆகிய எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக, உரிய நிறுவனங்களுக்கு கொடுப்பனவுகள் நேரடியாக மேற்கொள்ளப்பட்டதுடன் அதனால், கொடுப்பனவுகள் முறைமையை கணக்காய்வில் உறுதிப்படுத்தமுடியவில்லை.

## 4.3 பதவியணியினர் நிர்வாகம்

------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 யூலை 08 ஆம் திகதிய பிஈடி/பியூ ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரமும் 2006 செப்தெம்பர் 22 ஆம் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு இணங்கவும் அனைத்து நியதிச் சட்ட நிறுவனங்களாலும் தனது நிறுவனக் கட்டமைப்பு மீளமைக்கப்பட வேண்டியிருந்ததுடன், ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறை, பதவியணியினர் எண்ணிக்கை மற்றும் சம்பள அளவு என்பன திருத்தப்பட்டு தேசிய சம்பள மற்றும் ஊழியர் ஆணைக்குழுவினது பரிந்துரை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஈ/429/2002 ஆம் இலக்க உசாத்துணை மற்றும் சட்ட ஆணையாளரின் 2002/12/10 ஆம் திகதிய கடிதத்தில் இது உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், நிறுவகத்தின் செயற்பாடுகளுக்காக நிறுவகத்தின் பதவியணியை ஆட்சேர்த்தலும் அவர்களிற்கான கொடுப்பனவை உரிய முறையில் மேற்கொள்வதற்கும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் அவசியமானதல்ல என அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டிருந்தார்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் ஆட்சேர்ப்பு திட்டத்திற்கான அங்கீகாரம் நிறுவனத்தால் பெறப்பட்டிருக்காததுடன் 05 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையிலும் 32 உத்தியோகத்தர்கள் ஒப்படை அடிப்படையிலும் 2016 ஆம் ஆண்டிற்குரிய நிதியத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர்.

மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படை ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்கள் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையின் அனுமதி பேரில் மாத்திரம் முற்திகதியிடப்பட்டு நிரந்தரமாக்கப்பட்டிருந்தனர். நிர்மாண உத்தரவாத திகதியின் உள்ளகதன்மை, தொழிற்பாடு மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாகவும், அத்தகைய நடவடிக்கைகளின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்தின் நடைமுறையான அறிவுறுத்தல்களிற்காக நம்பிக்கைப் பொறுப்பு உறுதியால் திறைசேரியின் செயலாளர், நிதி அமைச்சின் செயலாளர், நியாயத்தீர்ப்பின் அறிவுறுத்தியிருந்துடன் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் முதல் நியமத் திகதியிலிருந்து 03 வருடங்களின் பின்னர் அவர்களை நிரந்தரமாக்கும் அடிப்படையினது அரசாங்கத்தின் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமையாகவிருப்பதுடன் அதற்கிணங்க நம்பிக்கைப் பொறுப்பு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என செயலாளர் அறிவுறுத்தியிருந்தார்.

(இ) இத்தகைய ஊழியர்களின் சம்பளங்கள் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு முரணாக நம்பிக்கை பொறுப்பு சபையின் சுயேச்சையான விருப்பத்தின் பேரில் மாத்திரமே தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 60 வருடங்களை மிகைத்த உத்தியோகத்தர்கள் கூட நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் அனுமதியின் பேரில் மாத்திரம் நிரந்தரமாக்கப்பட்டிருநுதனர்.

## 4.4 முகாமைத்துவ நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) உத்தியோகத்தரொருவர் 03 ஏனைய குடும்ப உறுப்பினர்களுக்கும் விபத்துக்கள் மற்றும் மருத்துவ சிகிச்சைகளுக்கும் உத்தியோகத்தரொருவருக்கு ரூபா 500,000 அதிகப்பட்ட தொகை பெறுவதற்கு மற்றும் பற்றுச்சீட்டுக்களை மீளளிப்பதற்கும் 09/2013 ஆம் இலக்க முகாமைத்துவ தீர்மானத்தால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக நன்மைகளை வழங்குவதற்காக முறையான செய்முறை காணப்படாதிருந்ததுடன் 24 உத்தியோகத்தர்களின் மருத்துவ பற்றுச்சீட்டுக்களின் தீர்ப்பனவிற்காக மாத்திரம் நிதியத்திலிருந்து ரூபா 2,902,458 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் இது உத்தியோகத்தரொருவரிற்கு ஆண்டிற்கு சராசரியாக ரூபா 120,936 தொகையாகக் காணப்பட்டது.

(ஆ) நிதியத்தின் உத்தியோகத்தர்களுக்கு எடுக்காத விடுமுறைகளுக்காக திறைசேரியின் அனுமதியின்றி ரூபா 241,095 தொகையான செலுத்துகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் ரூபா 1,407,100 தொகையான ஊக்குவிப்புப் படியொன்று செலுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஊக்குவிப்புப்படி திட்டத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) ஊக்குவிப்புப்படி கணிப்பிடப்பட்ட முறை மீதான தகவல் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஊக்குவிப்புப் படிகளின் செலுத்துகைக்கு செயலாற்றல் மீதான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) காசாக மாற்றுவதற்காக நிதியத்தால் வழங்கப்பட்ட முறிகளின் அத்தியாவசியத்தன்மை தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதியளவில் உரிய ஒப்பந்தகாரர்களிடமிருந்து நிறுவனத்திற்கு பெறவேண்டிய தொகை ரூபா 71,083,790 தொகையாகவிருந்ததுடன் அதனுடன் தொடர்புடைய விரிவான பட்டியல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. முறிகளை முன்னைய 04 ஆண்டுகாலப்பகுதியினுள் வெளியிடுவது தொடர்பாக நிதியத்திற்கு ஒப்பந்தகாரர்களிடமிருந்து ரூபா 70,576,790 தொகை அறவிடப்படவேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டில் எவ்வித தொகையினையும் அறவிடுவதற்கு தவறியிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 133 ஆம் நிதிப்பிரமாணம் மற்றும் 2009 யூன் 09 இன் டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு பிரிவு தாபிக்கப்படாதிருக்காததுடன் அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவினாலும் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5.2 கணக்காய்வுக் குழுக்கள்

2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டம் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் நிதியத்தின் உத்தியோகத்தர்கள் அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களுக்கும் அழைக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் 2002 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுப் பரப்புகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) பதவியணியினர் நிர்வாகம் | ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு, பதவியணியினர் மற்றும் சம்பள அளவு திட்டங்களை திருத்தியமைப்பதன் மூலம் தேசிய சம்பளங்களின் பரிந்துரைகளை பெறுவதற்கும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியை பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) நிதி முகாமைத்துவம் | நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி சிட்டைகளில் பணத்தை திறைசேரியின் செயலாளரின் அனுமதியை பெறாமல் பணத்தை முதலிடுதல். |